DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate No.II. Srivilliputtur

C.C.No.397/2021

Deposition of witness for PW.1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | திரு.பாண்டியராஜா | சாதி | .. | |
| த.பெ. | .. | | சமயம் | .. | |
| கிராமம் | .. | | தொழில் | .. | |
| தாலுகா | .. | | வயது | .. | |

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of the day of 1.7.2022

மு.வி – நான் இறுதியாக 2019 ஏப்ரல் மாதம் வனச்சரக அலுவலராக திண்டுக்கல் மண்டலத்தில் பணியிலிருந்து ஓய்வு பெற்று விட்டேன். 6.3.2014ம் தேதி நான் வனச்சரக அலுவலராக திருவில்லிபுத்தூரில் பணிபுரிந்தபோது இரவு சுமார் 11 மணியளவில் செண்பகத்தோப்பு அத்துண்டு பீட் உன்னிமலை சராகம் ரோந்து பணியில் தணிக்கை செய்து கொண்டிருந்தபோது அருகிலுள்ள மம்சாபுரம் செண்பகதோப்பு குடியிருப்பில் பழைய யானைகள் விவசாய தோப்பில் உள்ளே நுழைந்து பயிர்களை நாசப்படுத்தியதாக கொடுத்.த புகாரின்பேரில் எனது மேலதிகாரிகளின் உத்தரவின் பேரிலும் தினந்தோறும் நாங்கள் யானை விவசாய இடத்திற்கு வராமலிருப்பதற்காக உள்ள பணியை செய்து கொண்டிருந்தோம். எனது பொறுப்பிலிருந்த மொத்தம் 13,516 ெஉறக்டேர் பரப்பளவுக்குரிய வனப்பகுதிகளில் யானைகள் நடமாட்டம் அதிகமாக இருக்கும். திடீரென்று தனிநபர் தகவலின்பேரில் 6.3.2014ம் தேதி இரவு சுமார் 11.00 மணியளவில அதிவேகமாக சென்று என்னுடன் 9 பணியாளர்களை அழைத்து சென்றேன். 4 பணியாளர்கள் என்னுடனும் மற்றவர்களை குழுவாக பிரித்து பணிக்காக அனுப்பி வைத்தேன். நாங்கள்

பணியிலிருந்தபோது யானை பிளிறும் சத்தம் கேட்டது. அப்போது நானும் என்னுடன் வந்த 4 பணியாளர்களை அழைத்துக்கொண்டு செண்பகத் தோப்பிலிருந்து 600 மீட்டர் தொலைவிலுள்ள அத்திதுண்டு பீட் அருகிலுள்ள வாழைக்குளம் கிராமம் சர்வே எண்.புல எண்.268/2 எப் அருகில் சென்றுகொண்டிருந்தபோது யானை கீழே சரிவதைக் கண்டோம். நானும் வனக்காப்பாளர் தர்மராஜும் பார்க்கும்போது எலக்ட்ரிக் வயரை கொக்கி போட்டு இழுத்தபோது அதில் மிதித்த ஆண்யானை சம்பவயிடத்தில் இறந்து விட்டது. அதன்பின்பு நான் மேற்படி கம்பியின் அருகே சென்று என்னையறியாமல் கால் வைத்து போகும்போது என்னுடன் வந்த வனக்காப்பாளர் தர்மராஜ் என்னை பிடித்து இழுத்து என்னை காப்பாற்றினார். அந்த சம்பவ சமயத்தன்று நான் டார்ச்லைட் அடித்து பார்க்கும்போது சர்வே பகுதியினுள் நீதிமன்றத்தில் தற்போது ஆஜராகியுள்ள எதிரிகள் 2 பேர்களையும் நான் பார்த்தேன். எல்லா வன பணியாளர்களும் ஒன்று சேர்ந்து இறந்து போன யானைக்கு பாதுகாப்பாக இருக்க வைத்து மேலதிகாரிக்கு நாங்கள் சம்பவத்தை பற்றியும் யானை இறந்ததை பற்றியும் தகவல் கொடுத்தேன். எதிரிகள் இருவரையும் திருவில்லிபுத்தூர் வனச்சரக அலுவலகத்திற்கு கொண்டு சென்றோம். எனது விசாரணையில் இதுபோன்ற மின்சார வயர்களை திருட்டுத்தனமாக கொக்கி போட்டு வயரை கீழே இழுத்து வைப்பதன் காரணமாக பல மிருகங்கள் இறப்பதை தெரிந்து கொண்டேன். அலுவலகத்தில் 2 எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டு வாக்குமூலம் கொடுத்தார்கள். சம்பவம் நடந்த சமயத்தில் சம்பவயிடத்தில் வைத்து பார்வை ஸ்தலமாக மகசர் தயார் செய்யப்பட்டது. பார்வை ஸ்தல மகசர் **அசாஆ.1** ஆக குறியிடப்படுகிறது. நான் எதிரிகளிடமிருந்து அலுவலகத்தில் வைத்து பெற்ற ஒப்புதல் வாக்குமூலம் **அசாஆ.2** மற்றும் **அசாஆ.3** ஆக குறியிடப்படுகிறது.

7.3.2014ம் தேதி காலை சுமார் 7.30 மணியளவில் இளநிலை மின்பொறியாளர், உதவி செயற்பொறியாளர் மற்றும் கால்நடை மருத்துவருக்கு சம்பவத்தை பற்றி தகவல் தெரிவித்து முறையாக கடிதம் அனுப்பினோம். கால்நடை மருத்துவருக்கு பிரேத பரிசோதனை செய்வதற்காக கடிதம் அனுப்பப்பட்டது. பணியாளர்களை 2 குழுவாக பிரித்து நான் சம்மந்தப்பட்ட குழு கிராம நிர்வாக அலுவலரும் சேர்ந்து சம்பவயிடத்திற்கு சென்று ஸ்தலத்தை பார்வையிட்டு மின்சார கம்பி 80மீட்டர் மற்றும் கட்டை நீளம் 3.20 செமீ. H நமுனா **அசாஆ.4** ஆக குறியிடப்படுகிறது. அதன்பின்பு 1972 வன உயிரின பாதுகாப்பு சட்டம் பிரிவு 9,39(ia),(id),51–ன் கீழ் எதிரிகளை கைது செய்து திருவில்லிபுத்தூர் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 முன்பு ஆஜர்படுத்தி எதிரிகளை 15 நாட்கள் நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டது. காவல் அடைப்பு **அ.சா.ஆ.5** ஆக குறியிடப்படுகிறது. வன உயிரின காப்பாளர், வன பாதுகாவலர் விருதுநகர் செயற்பொறியாளர், இளநிலை செயற்பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர், கால்நடை மருத்துவ குழுவினர் ஆகியோர்கள் சம்மந்தப்பட்ட இடத்திற்கு சென்று இடத்தை மேற்கூறிய அதிகாரிகள் பார்வையிட்டு கால்நடை மருத்துவர் மூலம் இறந்து போன 6 வயது ஆண் யானைக்கு உடல் கூறாய்வு செய்யப்பட்டது. மேற்படி ஆய்வில் ஆண்யானையின் வயது சுமார் 6 என்றும் வலது பக்க தந்தத்தின் நீளம் 48 செமீ இடது பக்க தந்தத்தின் நீளம் 54 செமீ சம்மந்தப்பட்ட இடத்திலே யானை புதைக்கப்பட்டது. இந்த வழக்கு சம்மந்தமாக நான் 16.11.2015ம் தேதியில் குற்ற இறுதி அறிக்கையை திருவில்லிபுத்தூர் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 முன்பு சமர்ப்பித்தேன்.